# விபஸ்ஸனா
## செய்தி மடல்
### தமிழ் மாத இதழ்

(விபஸ்ஸனா: ஸயாஜி ஊபாகின் வழிமரபில், திரு சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கப்படும் தியான முறை)

மலர்: 2 ★ இதழ்: 10 ★ ஐப்பசி: 2023 ★ விலை: ₹ 2.50/- ★ ஆண்டு சந்தா : ₹ 30/-

# ஒரு புதிய வாழ்க்கையின் நாற்பது ஆண்டுகள்

## ச.நா. கோயங்கா

**மதிப்பிற்குரிய ச. நா. கோயங்காவின் விபஸ்ஸனா பயிற்சியின் தொடக்கத்தின் நாற்பதாவது ஆண்டு நினைவாக 1995 இலையுதிர் காலத்தில் விபஸ்ஸனா பத்திரிக்கையில் புதிய வாழ்க்கையின் நாற்பது ஆண்டுகள் வெளியிடப்பட்டது.**

செப்டம்பர் 1955-யின் முதல் பத்து நாட்கள் என் வாழ்க்கையின் மிக விலைமதிப்பற்றவையாகும். மிகுந்த இரக்கமுள்ள இல்லறத் துறவியான ஸயாஜி ஊ பா கின் அவர்களின் காலடியில் அமர்ந்து, உள்ளுக்குள் இருக்கும் சத்தியத்தைக் கவனிக்கும் உன்னத கலையை அதன் தொன்மைத் தூய்மையில் நான் கற்றுக்கொண்டேன். ஏதொவொரு கடந்த கால பிறப்பின் ஒரு பெரிய பாக்கியமாக, விலைமதிப்பற்ற பலனைத் தந்த ஓர் உயர்ந்த நற்பேறாக (புண்ணிய செயல்) இது அமைந்தது. இவ்வாறான தூய்மையான தருணங்கள் நிகழும் என்று நான் ஒருபோதும் கனவிலும் கண்டிருக்க முடியாது. அது ஒரு புதிய பிறப்பாக அமைந்தது.

என் முதல் பிறப்பு முப்பத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தது. இப்போது நான் உண்மையாகவே இரண்டு முறை பிறந்தவனாவேன். இந்த இரண்டாம் பிறப்பு உண்மையில் ஒரு தகுதியான பிறப்பாக அமைந்தது. அதன் தாயிடமிருந்து பிறந்த ஒரு பறவை ஒரு ஓட்டில் அடைக்கப்பட்டிருப்பதைப் போல, என் முதல் பிறப்பு ஆழ்ந்த அறியாமையின் இருளில் மூடப்பட்டிருந்தது. அது முட்டை ஓட்டை உடைத்து எப்பொழுது ஒளியில் வெளிப்படுகின்றதோ, அப்பொழுதுதான், அப்பறவை இரண்டாம் முறை பிறக்கிறது; அதுவே அதன் உண்மையான பிறப்பாகும். சிறிய பறவை அதன் ஓட்டில் இருந்து சூரிய ஒளியில் வெளிப்படும்போது அதன் கண்களை சிமிட்டுவது போல, அறியாமையின் இருண்ட அடுக்கு முதன்முறையாக ஊடுருவியபோது நான் ஆச்சரியப்பட்டேன், உண்மையான புரிதலின் கதிர்களைப் பார்த்தேன். உண்மையில், முட்டை ஓடு அல்லது கருப்பையின் இருளை விட அறியாமையின் இருள் இருண்டதாகும்.

பயிற்சி எடுப்பதற்கு முன்பு நான் உள்ளிருக்கும் சத்தியத்தை தொலைதூரத்தில்கூட உணர்ந்திருக்கவில்லை. ஆயினும், அந்த பத்து நாட்களில் நான் அதை எவ்வளவு நன்றாக அனுபவித்தேன்! எப்போதும் மிகவும் திடமாகவும் கனமாகவும் தோற்றமளித்த இந்த அழிந்துபோகக்கூடிய, பௌதீக சரீரம் இப்போது அதன் ஒவ்வொரு அணுவும் உயிர்ப்பித்து இருந்தது. அதைவிட இன்னும் பெரிய சாதனை

என்னவென்றால், மன அசுத்தங்களை ஒழிப்பதற்கான எளிமையான மற்றும் அறிவியல் பூர்வமான முறையொன்றை நான் கண்டேன். உடலுக்கும் மனதிற்கும் இடையிலான உண்மையான தொடர்பை உணர்ந்துகொள்வதன் மூலம், ஆழமாக வேரூன்றிய அந்த மன அசுத்தங்களின் கட்டுக்கள் இப்போது சிதைந்து போகத் தொடங்கின. தியான நடைமுறையின் மிகவும் மதிப்புமிக்க நிலைகளைப் பற்றி நான் படித்தும் கேள்விப்பட்டும் இருக்கிறேன்; இப்போது நான் அவற்றை அனுபவித்துக்கொண்டிருந்தேன். என் ஆசிரியர் ஸயாஜி ஊ பா கின் அவர்கள் மீதான நன்றியுணர்வால் என் இதயம் நிரம்பி வழிந்தது.

வீட்டிற்குத் திரும்பிய பிறகு, எனது நேரமில்லா கால அட்டவணையின் கடுமையான கோரிக்கைகள் இருந்தபோதிலும், ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் இடைவிடாமல் விபஸ்ஸனாவைப் பயிற்சி செய்தேன். இது அடிப்படை மாற்றங்களைக் கொண்டு வந்தது; இதனால் எனது மதிப்பிற்குரிய ஆசிரியர் மீதான ஆழ்ந்த நன்றியுணர்வு பெரிதும் ஆழமடைந்தது.

விபஸ்ஸனா என் வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறியது. காமம், கோபம் மற்றும் அகந்தை ஆகியவற்றின் நெருப்பில் இடைவிடாமல் எரிந்திருந்த மனம் இப்போது ஒரு அரிய ஆன்மீக அமைதியையும், நிம்மதியையும் அனுபவித்தது. அது எங்கே இருந்தது

எண்ணற்ற இல்லற, வணிக மற்றும் சமூகப் பொறுப்புகளின் தொடர்ச்சியான பதட்டத்தால் பாதிக்கப்பட்டிருந்த என் மனம் இப்போது மகிழ்ச்சி மற்றும் ஆரோக்கியத்தால் வளப்படுத்தப்பட்டது. விபஸ்ஸனா எனது உலகப் பொறுப்புகளிலிருந்து என்னை விலக்கவில்லை, மாறாக அவற்றை சமநிலையுடன் நிறைவேற்ற எனக்கு புதுப்பிக்கப்பட்ட ஆற்றலைக் கொடுத்தது. இதன் விளைவாக, வேலை செய்வதற்கான எனது திறன் கணிசமாக அதிகரித்தது.

பல ஆண்டுகளாக நான் தீவிரமான சாத்திர நூல்களின் ஆய்வுகளிலும் உணர்ச்சிபூர்வமான பக்தி நடைமுறைகளிலும், என் குடும்பத்தினர் வணங்கிய தெய்வங்களை மிகவும் பிரார்த்திப்பதிலும் முற்றிலும் மூழ்கியிருந்தேன். இந்த நடைமுறைகள் இருந்தபோதிலும், ஆழமாக புதைந்திருக்கும் அசுத்தங்கள் அப்படியே இருந்தன. ஆனால் இப்போது தியானத்தின் இந்த எளிமையான மற்றும் இயற்கையான வழிமுறையின் காரணமாக அவைகள் பலவீனமடையத் தொடங்கின. என் உள்ளம் நன்றியால் நிரம்பி வழிந்தது.

என் குழந்தைப் பருவத்திலிருந்தே, எங்கள் குலதெய்வங்களைப் பற்றிய நம்பிக்கைகளால் நான் கட்டுண்டு கிடந்தேன். பகவான் புத்தர் விஷ்ணுவின் ஒன்பதாவது மற்றும் மிகவும் பரிணாம வளர்ச்சியடைந்த அவதாரம் என்று போதிக்கப்பட்டாலும், அவரது போதனைகள் மந்திரத்தை நோக்கியதாக சித்தரிக்கப்பட்டன; அவை உண்மையான விசுவாசிகளுக்கு தகுதியற்றவை என்று கருதப்பட்டன. இந்த நம்பிக்கைகள் இடறல்களாக இருந்துகொண்டு, எனது முதல் விபஸ்ஸனா முகாமில் சேர என்னுள் தயக்கத்தை ஏற்படுத்தின.

ஆனால் புத்தர் ஆழ்ந்த இரக்கமுள்ளவர் என்றும் நான் கேள்விப்பட்டிருந்தேன். குழந்தையாக இருந்தபோது, அவரது உறவினர் தேவதத்தன் ஒரு அம்பு கொண்டு ஒரு அன்னப் பறவையைக் காயப்படுத்திய கதையையும், இளம் கௌதமர் அதை எப்படி இரக்கத்துடன் காப்பாற்றினார் என்பதையும் நான் படித்ததுண்டு. மியான்மர் (பர்மா) மக்கள் மிகவும் ஒழுங்குள்ளவர்களாகவும், கபடமற்றவர்களாகவும் இருந்ததையும் நான் கவனித்தேன். புத்தரின் போதனைகள் தவறாக இருந்தால், அவரைப் பின்பற்றுபவர்கள் எவ்வாறு இவ்வளவு கண்ணியமானவர்களாக இருக்க முடியும்? என்னும் ஒரு கேள்வி என் மனதில் எழுந்தது.

என் சிறுவயதிலிருந்தே ஒட்டிக்கொண்டிருந்த கண்மூடித்தனமான நம்பிக்கைகள் என் மனதை இன்னும் குழப்பமடையச்செய்தது. சில நம்பிக்கைகள் என் தந்தையின் நிறுவனத்தில் உயர் பதவி வகித்த என் அம்மான் மகன்களில் ஒருவரிடமிருந்து வந்தன. அவர் என்னை விட மிகவும் வயதானவராகவும் ஒரு சமஸ்கிருத அறிஞராகவும் இருந்தார். அவர் சாத்திரங்களை விரிவாக வாசித்திருந்தார்.

எந்தவொரு வாக்குவாதத்திலும் "சாத்திரங்கள் அவ்வாறு கூறுகின்றன." என்பதே அடிக்கடி அவர் பயன்படுத்தப்படும் ஆயுதமாக இருந்தது. சடங்குகளிலும் சம்பிரதாயங்களிலும் மூழ்கி, அவர் ஒவ்வொரு நாளும் நான்கு அல்லது ஐந்து மணி நேரம் ஜெபித்தும், பிரார்த்தித்தும் இருந்தார். அவரது தினசரி பாராயனங்கள் ஈர்க்கக்கூடியவையாக இருந்தன; சிறு வயதிலிருந்தே முக்கியமான சாத்திரப் பத்திகளை ஓத அவை எனக்கு ஊக்கமளித்தது. இதற்காக நான் அவருக்கு நன்றியுள்ளவனாக இருப்பேன். நான் இந்த தினசரி காலை பாராயணங்களை அனுபவித்து மகிழ்ந்தேன்; இந்த வார்த்தைகள் நீண்ட காலத்திற்கு என் மனதில் எதிரொலித்தன. எனது முழு குடும்பமும் விஷ்ணு, கிருஷ்ணா மற்றும் சிவன் ஆகிய தெய்வங்களுக்கு ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் இருந்தது. எனது மந்திர ஓதல்கள் இந்த பரம்பரை பக்தியை மேலும் பலப்படுத்தின.

என் மாமா மிகவும் கண்டிப்பானவர். அவர் புத்தபிரானை எதிர்க்கவில்லை என்றாலும், அவரது போதனைகளை கடுமையாக எதிர்த்தார். மறுபுறம், நான் அடிக்கடி என் தாத்தாவுடன் மண்டலேயில் உள்ள புகழ்பெற்ற மகாமுனி (புத்த) கோயிலுக்குச் செல்வதுண்டு. அங்கு மிகுந்த அமைதியை உணர்ந்தேன். என் மாமா அடிக்கடி என்னிடம், "இந்த மனிதன் வயதானவனாகிவிட்டான், ஆனால் நீ இன்னும் இளமையாக இருக்கிறாய், தவறான பாதையை எடுப்பதைத் தவிர்க்க வேண்டும்" என்று கூறுவார்.

ஆனால் என் தாத்தாவின் மரணத்திற்குப் பிறகும் நான் தொடர்ந்து ஆலயத்திற்குச் சென்றேன். புத்தரின் கோயில்களின் அமைதியும் தூய்மையும் என்னை ஈர்த்தது. அப்போது தியானத்தைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது, ஆனால் நான் மகாமுனி கோவிலுக்குச் சென்ற போதெல்லாம் மிகுந்த அமைதியை உணர்ந்தேன்.

ஸயாஜி ஊ பா கின் அவர்களுடன் பேசிய பிறகு நான் இறுதியாக ஒரு விபஸ்ஸனா முகாமில் சேர்ந்தேன். ஆழ்ந்த இரக்கத்தோடும் அன்புள்ள தயவோடும் கொடுக்கப்பட்ட அவரது விளக்கங்கள், இந்த தியானப் பயிற்சி எவ்வளவு மாசற்றது என்பதைப் புரிந்துகொள்ள என்னை அனுமதித்தது. புத்தரின் போதனைகளுக்கு எதிரான நூற்றாண்டு பழமைமிக்க பிரச்சாரங்கள் எவ்வளவு பொய்யானது மற்றும் தவறாக வழிநடத்துகிறது என்பதை முதல் முகாமில் நான் உணர்ந்தேன்.

உலகப் பொதுவான சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்த காட்டுத்தனமான, கட்டுக்கடங்காத மனதை ஒருமுகப்படுத்தும் ஒரு தியானத்தைப் பயிற்சி செய்வதில் என்ன தவறு இருக்க முடியும்? என்பதை நான் இப்போது தெளிவாகப் பார்த்தேன். இதுவரை வேறொருவரின் ஞானத்தை நம்பியிருந்த ஒரு மனதை, உண்மையில், இப்பொழுது தமது சொந்த அனுபவத்தின் அடிப்படையில் ஞானத்திலும் அறிவிலும் நிலைநிறுத்துவதில் என்ன தவறு இருக்க முடியும்? அசுத்தங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்டு, மெத்தா (அன்புமிகுந்த பரிவிரக்கம்), கருணை, முதிதை (பரஸ்பர பெருமிதம்) மற்றும் உபேகா (உள்ளச் சமநிலை) ஆகிய நற்குணங்களால் நிரப்பப்பட்ட ஒரு மனதினால் ஏற்படும் ஒரு புதிய வாழ்க்கையை நடத்தும் கலையைக் கற்றுக்கொள்வதில் ஏதேனும் தவறு இருக்க முடியுமா? சிறுவயதிலிருந்தே இந்த நுட்பமான குணங்களின் முக்கியத்துவத்தைப் பற்றி நான் படித்து கேள்விப்பட்டிருக்கிறேன். வெற்று சொல்லாட்சியில் மட்டுமே விவரிக்கப்பட்டுள்ள நித்திய சத்தியத்தின் அனுபவ அம்சங்களை எவரேனும் கற்பித்தால், இந்த போதனைகள் எவ்வாறு பொய்யானவை, மாயையானவை அல்லது மந்திரமானவை என்று கருதப்பட முடியும்? என்று இப்போது நான் உணர்ந்தேன் நான் விபஸ்ஸனா பயிற்சியை குற்றமற்றதாகக் கண்டேன்.

பின்னர் நான் புத்தரின் வார்த்தைகளைப் படிக்க முடிவு செய்தேன்; ஒருவேளை அங்கு தவறான அல்லது தவறாக வழிநடத்தும் ஒன்றைக் காணலாம் என்று நினைத்தேன். ஆனால் நான் புத்தரது வார்த்தைகளைப் படிக்கும்போது, தம்மம் உன்னதமானது மற்றும் தூய்மையானது என்பதையும், அனைவருக்கும் நன்மை பயக்கும் என்பதையும் நான் அதிகத் தெளிவுடன் பார்த்தேன்.

அந்த நாட்களில், நிறுவப்பட்ட ஆசிரமங்களை (ஆன்மீக பயிற்சி

மையங்கள்) பார்வையிடவும், பல்வேறு மதத் தலைவர்களைச் சந்திப்பதற்காகவும் நான் இந்தியாவுக்கு வருவதுண்டு. நான் ஒரு மாயையில் சிக்கியிருந்தால், ஒருவேளை நான் தவறான பாதையில் நடக்கத் தொடங்கியிருக்கிறேனா என்பதைத் தீர்மானிக்க விரும்பினேன். விபஸ்ஸனா ஒரு சரியான பாதையாக இருந்தால், நான் ஏற்கனவே கற்றுக்கொண்டதை விட இன்னும் எவ்வாறு முன்னேற முடியும்? என்பதை நானும் கற்றுக்கொள்ள முயன்றேன். இறுதியில், இந்த ஆய்வுகளுக்குப் பிறகு, புத்தரின் போதனையின் உன்னதமான அறிவை இழந்ததிலிருந்து இந்தியா ஆன்மீக ரீதியாக ஏழ்மையாகிவிட்டது என்று நான் உறுதியாக உணர்ந்தேன்.

விபஸ்ஸனா தியானம் மட்டுமல்ல, நமது இந்திய மூதாதையர்களின் ஞானமின்மையால் இழந்த அசல் போதனைகளின் கூற்றுக்களும் ஆகிய இந்த விலைமதிப்பற்ற இரத்தினங்களை, இந்தியாவின் அண்டை நாடான மியான்மர், அவற்றின் தொன்மைத் தூய்மையில் பாதுகாத்ததற்கு உண்மையிலேயே ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. தவறான பிரசாரங்கள் இந்தியா முழுவதும் பரப்பப்பட்ட விதத்தை நான் இப்போது தெளிவாகப் புரிந்துகொண்டேன்; இதன் மூலம் புத்தர் பாராட்டப்பட்டார், ஆனால் அவரது போதனைகள் கண்டிக்கப்பட்டன. இந்தியாவின் படித்த வகுப்பினர் எவ்வாறு ஏமாற்றப்பட்டு, நம் நாட்டின் பண்டைய, காலமற்ற, விலைமதிப்பற்ற பொக்கிஷத்தை இழந்ததை உணர்ந்தபோது நான் வருத்தப்பட்டேன், திகைத்தேன். நாடு விழித்துக்கொள்ள வேண்டிய நேரம் இது.

எனது அன்றாட தியானப் பயிற்சியைத் தவிர, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 7:00 மணிக்கு கூட்டுத் தியானத்திற்காக யாங்கோனில் உள்ள எனது மரியாதைக்குரிய ஸயாஜியை அவரது மையத்தில் சந்தித்தேன். மேலும் ஆண்டுக்கு குறைந்தது ஒரு பத்து நாள் முகாமில் பங்கேற்று விபஸ்ஸனா பஞ்ஞாவில் (அனுபவ ஞானம்) தொடர்ந்து ஆழமாகச் சென்றேன். சில நேரங்களில் நான் நீண்ட, அதிக மும்முரமான முகாம்களையும் மேற்கொண்டேன். படிப்படியாக நான் மானுட பிறப்பின் உண்மையான குறிக்கோளை உணர்ந்தறிந்தேன். மன-உடல் மட்டங்களில் உள்ள புலன்களின் யதார்த்தம், அநிச்ச (நிலையாமை), துக்க (துன்பம்) மற்றும் அநத்தா (அகந்தையின்மை) ஆகியவற்றின் உலகப் பொதுவான பண்புகள் அனுபவ ரீதியாக தெள்ளத் தெளிவாகிவிட்டன. சத்தியத்தை என் கையில் வைத்திருக்கும் ஒரு கனியாக என்னால் தெளிவாகப் பார்க்க முடிந்தது.

எனது முதல் முகாமில் நான் மிகவும் இயற்கையாகவும், சிரமமின்றி அனுபவித்த மொத்த கரைத்தலின் (பங்க ஞான) நிலை, உண்மையில் நிரந்தர, நித்திய, முழுமையான நிலை என்ற மாயையை உருவாக்கியது; அதேசமயம், நிஜத்தில், இந்த கரைதல் என்பது தெளிவாக அநிச்சவின் (தோன்றி மறைதல்) களத்திற்குள் நிகழும் உடல் மன உணர்ச்சிகளேயன்றி வேறொன்றுமில்லை.

அதைத் தொடர்ந்து, நுட்பமான யதார்த்தங்களையும் அவற்றின் தொடர்பான நிலைகளான ஆழ்ந்த அமைதி மற்றும் பேரின்பமும் பெரும் மகிழ்ச்சியும் நான் அனுபவித்தபோது, இந்த நிலைகளை அதிக விழிப்புணர்வுடன் அனுபவிப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்தேன். தியானி இன்னும் மனம் மற்றும் உடற்களத்தில் இருக்கும் இந்த உயர்ந்த ஆனால் மாயையான அனுபவத்தில் சிக்கித் தவிப்பதைத் தடுக்க இது அவசியமாகும். இந்த பேரின்பமான நிலை புலன்களைப் பற்றிய உயர்வான விழிப்புணர்வில் ஒன்றா அல்லது புலன்களை விஞ்சும் அனுபவமா என்பதை தியானிப்பவர் தெளிவாக உணர வேண்டும். புலன்களுக்கு அப்பாற்பட்ட இந்த அனுபவத்தில், புலன்கள் வேலை செய்வதில்லை; இவ்வாறு நிகழவில்லை என்றால், ஒருவர் இன்னும் மனம் மற்றும் உடற் களத்தில் தான் இருக்கிறார். ஆழமான விழிப்புணர்வுடன் நான் இந்த ஆழமான நுட்ப களத்திலும் தோன்றி மறைவதை அனுபவித்தேன். அநிச்ச, (நிலையாமை) விழிப்புணர்வு இல்லாமல், இந்த நிலை "நான்", "எனது", "என்னுடையது" மற்றும் "நிரந்தர, நித்திய, முழுமையான ஆத்துமா" என்ற மாயையான எண்ணங்களால் என்னை சிக்க வைத்திருக்கும். அதனால்தான்

இந்த அனுபவத்தின் உண்மை இயல்பை பற்றி முழுமையாக விழிப்புடன் இருப்பது இன்றியமையாததாகும்.

தொடர்ச்சியான விழிப்புணர்வை கடைப்பிடிப்பதன் மூலமும், முழுமையான விடுதலைக்கான பாதையில் பல்வேறு நிலைகளை அனுபவிப்பதன் மூலமும், அனைத்து சந்தேகங்களும் படிப்படியாகக் கரைந்து வந்தன. ஒவ்வொரு படியிலும், தர்மத்தின் உன்னதமான தூய்மையும், ஆன்மீகரீதியில் பயனளிக்கும் அம்சங்களும் தங்களை வெளிப்படுத்துகின்றன. இயற்கையாகவே, என் இதயம் நன்றியுணர்வின் உணர்வுகளால் நிரம்பியது. மிகுந்த கஷ்டங்கள் இருந்தபோதிலும், யுகங்களாக இழந்த விபஸ்ஸனா பயிற்சியை, மன தூய்மை மற்றும் முழு விடுதலைக்கு வழிவகுக்கும் ஒரே பயிற்சிமுறையை மீண்டும் கண்டுபிடித்த கௌதம புத்தர் மீது, என் உள்ளம் நன்றி உணர்வுகளால் நிரம்பி வழிந்தது. அவர் பாதையை நாடி, தன்னை விடுவித்துக் கொண்டது மட்டுமல்லாமல், எல்லையற்ற கருணையுடன் அதை எல்லோருடனும் பகிர்ந்துகொண்டார்.

முழு தூய்மையுடன் இந்த பயிற்சியின் அடிப்படை கொள்கைகளை பாதுகாத்த இந்தியாவிலும் அதன் பின்னர் மியான்மரிலும் விடாமுயற்சியுடன் பராமரிக்கப்படும் ஆசிரியர் - மாணவரின் தொடர்ச்சியான பாரம்பரியத்தை நோக்கி ஆழ்ந்த நன்றியுணர்வு பாய்கிறது. பெரும் கருணையுடன் எனக்கு விபஸ்ஸனாவைக் கற்பித்து, தூய்மையான தம்மத்தின் தத்துவார்த்த மற்றும் நடைமுறை அம்சங்களில் என்னை உறுதியாக நிலைநிறுத்திய என் தம்மத் தந்தை ஸயாஜியின் மீது நன்றியுணர்வு பாய்கிறது.

விபஸ்ஸனா பாதையில் எனது புதிய வாழ்வின் கடைசி நாற்பது ஆண்டுகளை நான் ஆய்வு செய்யும்போது, என் உள்ளம் ஆழ்ந்த திருப்தியிலும் மகிழ்ச்சியிலும் நிரம்பி வழிகிறது. இந்த நாற்பது ஆண்டுகளில், அநேக ஏற்றத்தாழ்வுளும், அநேக நீரூற்றுகளும், இலையுதிர்காலங்களும், அநேக திருப்பங்களும் இருந்திருக்கின்றன. ஆனால் விபஸ்ஸனாவின் அன்றாட பயிற்சி எல்லா சூழ்நிலைகளிலும் சமநிலையை வளர்த்துக் கொள்ள எனக்கு உதவத் தவறியதில்லை.

என் வாழ்வு முழுமை பெற்றது. எனது மதிப்பிற்குரிய ஆசிரியரின் அபரிமிதமான கருணையிலிருந்து, நான் ஒப்பிடமுடியாத வாழ்வாதாரத்தைப் பெற்றுள்ளேன். மேலும், நான் அதைத் தொடர்ந்து அபரிமிதமாகப் பெற்று வருகிறேன். தம்மத்தின் புத்துணர்ச்சியூட்டும் அமிர்தம் உறுதியாக முன்னேற எனக்கு நம்பிக்கையைத் தருகிறது. இது எனக்கு மிகவும் பயனளிப்பதோடு பலரையும் உயர்த்துகிறது. இதைப் பற்றி யோசித்துப் பார்த்தால், எனது மரியாதைக்குரிய ஆசிரியர் மீதான நன்றியுணர்வின் தீப்பொறி என் இதயத்தில் மீண்டும் உதிக்கிறது.

மிகவும் கருணையுள்ளம் கொண்ட புத்தரின் முயற்சிகளின் மூலம் 25 நூற்றாண்டுகளுக்கு முன்பு பாயத் தொடங்கிய தர்ம நதி எனது ஆழ்ந்த மரியாதைக்குரிய ஸயாஜியின் முயற்சிகளின் காரணமாக தற்போதைய சகாப்தத்தில் மீண்டும் ஒரு முறை உருவாகட்டும். அது, கட்டுண்டுக் கிடப்பவர்களையும், சோர்வடைந்தவர்களையும், தாகமுள்ளவர்களையும், வலியிலும் துக்கத்திலும் உள்ள அனைவரையும் விடுவிப்பதாக. இது அனைவருக்கும் பயனளிக்கட்டும், அது அனைவரையும் உயர்த்தட்டும் என்ற நல்லெண்ணத்தின் இந்த விருப்பம் என் இதயத்திலிருந்து பாய்கிறது.

கடலைப் போல ஆழமாகவும், பரந்த பூமியைப் போல அகலமாகவும், இமயமலையைப் போல உயரமாகவும் உள்ள புத்தரின் போதனையை அனுபவித்ததாலும் பாராட்டியதாலும், அதை அதன் தொன்மைத் தூய்மையில் ஏற்றுக்கொள்வதிலும், பயிற்சி செய்வதிலும், போதிப்பதிலும் நான் மிகவும் வசதியாக உணர்கிறேன். இந்த அற்புதமான தம்மத்தைத் தவிர வேறு எதையும் பயிற்சிசெய்வது அல்லது போதிப்பது பற்றிய எந்த ஐயமும் இருக்க முடியாது. தம்மம் என்பது பரிபூரணமாகும். அது முழுமையானது; சேர்ப்பதற்கு எதுவும் இல்லை. அது ‘பரிசுத்த’ அதாவது மிகவும் தூய்மையானதாக இருப்பதால், அகற்றுவதற்கு அதில் எதுவும் இல்லை. ●